


admin@dhinakani.com

நமது

# தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

காலை நாளிதழ்




| Vol: 04 | Issue: 027 | 4 Pages | 27.08.2026 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 027 | 4 பக்கங்கள் | 27.08.2026 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**ஒன்றானுந் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்**

**விளக்கம்:** தீய சொற்களின் பொருளால் விளையும் தீமை ஒன்றாயினும் ஒருவனிடம் உண்டானால், அதனால் மற்ற அறங்களாலும் நன்மை விளையாமல் போகும்.

# மேட்டூர் அணையை நாளை திறக்க திட்டம்? முதல்வர் விஜய் பயண ஏற்பாடுகள் தீவிரம்

சேலம், ஆக. 27

மேட்டூர் அணையில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 12ந்தேதி காவிரி டெல்டா பாசனத்திற்காக தண்ணீர் திறப்பது வழக்கம். நீர் இருப்பை பொறுத்து குறித்த நேரத்திலோ அல்லது கால தாமதமாகவோ அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்படும். இந்த பாசனத்தின்மூலம்சேலம்,நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, தஞ்சாவூர் உட்பட 13 மாவட்டங்களில் சுமார் 16 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசனவசதி பெறுகிறது. அணையில் நீர் இருப்பு குறைவாக இருப்பதால் சுமார்70நாட்கள்ஆகியநிலையிலும் அணையில் இருந்து குறுவை சாகுபடி பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. மேலும் டெல்டா பாசனத்திற்காக தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள்கோரிக்கைவிடுத்து வருகின்றனர்.

அணையின் நீர்மட்டம் 88.43 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 10 ஆயிரத்து 807 கனஅடிதண்ணீர்வந்துகொண்டு இருக்கிறது. இதனால் அணையின் நீர்மட்டம் மெதுவாக உயர்ந்து வருகிறது. வழக்கமாக ஜூன் 12ந்தேதி ஒவ்வொரு ஆண்டும் விவசாயத்துக்கு தண்ணீர் திறக்கப்படாதபட்சத்தில் அணையின் நீர்மட்டம் 90 அடியை எட்டும்போது தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். இன்னும் ஓரிரு நாட்களில் அணையின்



நீர்மட்டம் 90 அடியை எட்டி விடும் என தெரிகிறது. நேற்று காலை சட்டசபையில் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மேட்டூர் அணை எப்போது திறக்கப்படும் என்று கேள்வி எழுப்பி இருந்தனர்.

அதற்கு பதில் அளித்த நீர்வளத் துறை அமைச்சர் ஆனந்த், விரைவில் நல்ல பதில் வரும் என்று கூறி இருந்தார். இதற்கிடையே நேற்று சேலம் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகுத்தாலிங்கம்மேட்டூர் அணைக்குசென்றுதிடீரெனஆய்வு மேற்கொண்டார். இதனால் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பதற்கான முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் முதல்அமைச்சர் விஜய் 28ந் தேதி (நாளை ) மேட்டூர் அணையை திறக்க இருப்பதாக நேற்று மாலை தகவல் வெளியாகி உள்ளது.

அவர், விமானம் மூலம் சேலம் கமலாபுரம் விமான நிலையத்துக்கு வந்து அங்கிருந்து கார் மூலம் மேட்டூர் செல்கிறார். அப்போது டெல்டா பாசனத்துக்கு தண்ணீரை திறந்து வைக்கிறார். இதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகிறது.

## ஆர்எஸ்எஸ் நிகழ்ச்சிக்கு நியூயார்க் மேயர் மம்தானி எதிர்ப்பு.. பாஜக எம்.பி. போலா சிங் கண்டனம்



டெல்லி, ஆக. 27

அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள மேடிசன் ஸ்கொயர் கார்டனில் நடைபெற உள்ள ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பகவத் பங்கேற்கும் நிகழ்ச்சிக்கு நியூயார்க் நகர மேயர் ஜோஹ்ரன் மம்தானி ஆதரவு இல்லை என்று தெரிவித்துள்ளார். வரும் ஆகஸ்ட் 29ம் தேதி, புலம்பெயர்ந்த இந்திய சமூகத்தைச் சேர்ந்த சுமார் 5,000 பேர் பங்கேற்கும் நிகழ்ச்சியில் மோகன் பகவத் உரையாற்ற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆர்எஸ்எஸ் அமைப்பின்நூற்றாண்டுவிழாவையொட்டிஉலகளாவியஅளவில்மக்களைத் தொடர்புகொள்ளும்திட்டத்தின்ஒருபகுதியாகஅவரதுஅமெரிக்கப்பயணம் நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சி குறித்து கருத்து தெரிவித்த மம்தானி, தான் இந்தியஅமெரிக்கராக மட்டுமின்றி, நிறம், இனம், மதம், நம்பிக்கை அல்லது பூர்வீகம் என எந்த வேறுபாடும் இல்லாமல் ஒவ்வொரு தனிநபரையும் சமமாகக்கருதுவதாக தெரிவித்துள்ளார். அதேவேளையில், இது ஒருதனியார் நிகழ்ச்சி என்பதால் அதைத் தடுக்க நியூயார்க் நகர நிர்வாகத்திற்கு சட்டப்பூர்வ அதிகாரம்இல்லைஎன்றும்குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையே, மம்தானியின் கருத்துக்கு பாஜக எம்.பி. போலா சிங் கண்டனம் தெரிவித்துள்ளார். ஆர்எஸ்எஸ் அமைப்பின் செயல்பாடுகள் குறித்து முழுமையாகத் தெரியாதவர்களே இதுபோன்ற தவறான மற்றும் ஆதாரமற்ற கருத்துகளைத் தெரிவிப்பதாக அவர் கூறியுள்ளார். மேலும், ஆர்எஸ்எஸ் நீண்ட காலமாக சமூகசேவைமற்றும்தேசக்கட்டமைப்புபணிகளில்ஈடுபட்டுவருவதாகவும், சமூக சேவைக்கான அதன் அர்ப்பணிப்பை யாரும் கேள்விக்குள்ளாக்க முடியாது என்றும் போலா சிங் தெரிவித்துள்ளார்.

## எம்.எல்.ஏ.வின் காரை கழுவிய தீயணைப்பு வீரர்கள்: வீடியோ வெளியாகி சர்ச்சை



மத்தியபிரதேசம், ஆக. 27

மத்தியபிரதேச மாநிலம் சிங்க்ராலியில் பா.ஜ.க. எம்.எல்.ஏ. ராம்நிவாஸ் ஷாவின் தனியார் காரை, தீயணைப்பு வாகனத்தில் இருந்து தண்ணீர் பீய்ச்சி கழுவும் வீடியோ சமூகவலைதளங்களில்வெளியாகிசர்ச்சையைஏற்படுத்தியுள்ளது.பிலவுஞ்சி பகுதியில் உள்ள எம்.எல்.ஏ.வின் அரசு இல்லத்திற்கு வெளியே இந்த சம்பவம் நடந்ததாக கூறப்படுகிறது. தீயணைப்பு வாகனத்துடன் வந்த 3 பணியாளர்கள் குழாய் மூலம் காரின் மீது தண்ணீர் பீய்ச்சி கழுவுவது போன்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளன. இதையடுத்து, அவசரகால பணிகளுக்காக பயன்படுத்த வேண்டிய தீயணைப்பு வாகனத்தை தனிப்பட்ட தேவைக்கு பயன்படுத்தியது எப்படி ? என்று எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்பியுள்ளனர். மத்தியபிரதேச எதிர்க்கட்சி தலைவர் உமங் சிங்கார், இந்த விவகாரத்தில் பா.ஜ.க. எம்.எல்.ஏ.வை கடுமையாக விமர்சித்துள்ளார். பொதுமக்களின் வீடுகளில் தீ விபத்து ஏற்படும் நேரத்தில் தீயணைப்பு வாகனம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும் நிலையில், அதை தனிப்பட்ட கார் கழுவ பயன்படுத்தியிருப்பதாக அவர் குற்றம்சாட்டினார். இதுகுறித்து எம்.எல்.ஏ. ராம்நிவாஸ் ஷாவிடம் கேட்டபோது, இந்த சம்பவம் நடைபெற்ற போது வீட்டில் நான் இல்லை என்றும், காரை யார் கழுவச் செய்தார்கள் என்பது தனக்கு தெரியாது என்றும் கூறினார். மேலும், தீயணைப்பு வாகனம் அங்கு ஏன் வந்தது என்பதை மாநகராட்சி அதிகாரிகளிடம்தான் கேட்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.சிங்க்ராலி மாநகராட்சி ஆணையர் சவிதா பிரதான், இந்தசம்பவம் குறித்து தனக்குதகவல் இல்லை என்று கூறியுள்ளார். இதனால், அரசு வாகனம் தனியார் பயன்பாட்டுக்கு பயன்படுத்தப்பட்டதாக எழுந்த சர்ச்சை குறித்து விசாரணை நடத்தப்படுமா என்ற கேள்விகள் சமூக வலைத்தளங்களில் எழுப்பப்பட்டு வருகின்றன.

## கர்நாடகாவில் சோகம்: ஏரியில் மூழ்கி 6 பேர் பலி



பெங்களூரு, ஆக. 27

கர்நாடக மாநிலம் விஜயபுரா மாவட்டத்தில் பட்னல் ஏரி உள்ளது. இந்த ஏரியில் சடலங்கள் மிதப்பதாக போலீசாருக்கு இன்று தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்கு சென்ற போலீசார், ஏரியில் மூழ்கி உயிரிழந்த 4 பெண்கள், 2 சிறுவர்களின் சடலங்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், உயிரிழந்த 6 பேர் யார் ? எந்த பகுதியை சேர்ந்தவர்கள் ? ஏரியில் குளிக்க சென்று மூழ்கி உயிரிழந்தனரா ? தற்கொலை செய்தனரா ? கொலை செய்யப்பட்டனரா ? என பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சாலை பாதுகாப்பு, விபத்தில்லா பயணம் மற்றும் போக்குவரத்து விதிகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி



கோவை, ஆக. 27

கோவை சலீவன் வீதியில் அமைந்துள்ள மாரன்ன கவுண்டர் பள்ளியில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு சாலை பாதுகாப்பு, விபத்தில்லா பயணம் மற்றும் போக்குவரத்து விதிகள் குறித்த விழிப்புணர்வுநிகழ்ச்சி இன்றுகாலைசிறப்பாகநடைபெற்றது. இந்நிகழ்ச்சி பள்ளி முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இதில் வெரைட்டி ஹால் போக்குவரத்துகாவல்உதவி ஆய்வாளர்திரு.ரஞ்சன்,தலைமை காவலர் திரு. அருணகிரி மற்றும் தலைமை காவலர் திரு. சந்தோஷ் (HC 2398) ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு விரிவான விழிப்புணர்வு வழங்கி சிறப்புரையாற்றினர். மாணவர்களுக்கு வழங்கப்பட்ட முக்கிய சாலை பாதுகாப்பு அறிவுரைகள்: தலைக்கவசம் அணிதல்:

இருசக்கர வாகனத்தில் பயணிக்கும் போது அனைவரும் கட்டாயம் தலைக்கவசம் (Helmet) அணிந்து பயணிக்க வேண்டும். செல்போன் தவிர்த்தல்: வாகனம் இயக்கும் போது அலைபேசி (Cellphone) பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். அதிவேக பயணம் தவிர்த்தல்: அதிவேகமாகவோ (Rash Driving) அல்லது அஜாக்கிரதையாகவோ வாகனம் ஓட்டக்கூடாது. சாலை விதிகள்:

போக்குவரத்து சிக்னல்கள், ஜீப்ரா கிராசிங் மற்றும் சாலை குறியீடுகளை ஒழுங்காகப் பின்பற்ற வேண்டும். நிகழ்ச்சியின் போது மாணவர்கள் சாலை பாதுகாப்பு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் ஆசிரியர்கள் மற்றும் மாணவமாணவிகள் திரளாகப் பங்கேற்றனர்.

## நத்தம் அருகே சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு



நத்தம், ஆக. 27

நத்தம் அருகே சொறிப்பாறைப்பட்டி பகுதியில் அறிவொளி கரங்கள் கல்வியியல் அறக்கட்டளை சார்பில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கூட்டம் நடந்தது.

நிறுவன தலைவர் அழகர் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நத்தம் பகுதியில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடுவது, இலவச கல்வி உள்ளிட்டவை குறித்து ஆலோசனை செய்யப்பட்டது. நிர்வாகிகள், உறுப்பினர்கள், பொதுமக்கள் பலர் பங்கேற்றனர்.



சென்னையில் மேலும் இரு புதிய கிளைகள் தங்கமயில் ஜுவல்லரி நிறுவனம் திறக்கப்பட்டுள்ளது. தங்கமயில் நிறுவனம் கடந்த 35ஆண்டுகளாக தங்க நகை விற்பனையில் தனக்கென தனிப்பெருமை அடையாளத்தை பதித்துள்ளது. தங்கமயில் 50 லட்சத்திற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களை தமிழகம் முழுவதும் கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.மேலும் புரசைவாக்கம் மற்றும் முகப்பேர் வெஸ்ட் பிரம்மாண்ட திறப்பு விழா நடைபெற்றது. நவீன கலெக்ஷன்களை தனித்துவமான டிசைன்களாக அறிமுகப்படுத்தி உள்ளது.வருகை தந்த வாடிக்கையாளர் அனைவரையும் கடை நிறுவனத்தினர் பலராம கோவிந்ததாஸ் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர், பா.ரமேஷ்,இணை நிர்வாக இயக்குனர்,என்.பி. குமார்,இணை நிர்வாக இயக்குனர் அன்புடன் வரவேற்றனர்.

## புதுச்சேரி முதலமைச்சர் திரு. எம். ரங்கசாமி அவர்களை நேரில் சந்தித்து, செவிலியர்களின் அன்பையும் நன்றியையும் வெளிப்படுத்தும் வகையில் ஒரு சிறப்பு பரிசு வழங்கினர்

இந்திரா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன மருத்துவமனையின் செவிலியர் அதிகாரிகள் சார்பாக, புதுச்சேரி முதலமைச்சர் திரு. எம். ரங்கசாமி அவர்களை நேரில் சந்தித்து, செவிலியர்களின் அன்பையும் நன்றியையும் வெளிப்படுத்தும் வகையில் ஒரு சிறப்பு பரிசு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இந்த அழகிய நினைவுப் பரிசு, ஐஸ்வர்யா ஃபர்னிச்சர்ஸ் நிறுவனத்தின் மூலம் தேக்கு மரத்தில் கலைநயத்துடன் வடிவமைக்கப்பட்டது. இதில் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம். ரங்கசாமி அவர்களின் உருவப்படத்துடன், அவர் அப்பாசுவாமியிடம் ஆசீர்வாதம் பெறுவது போன்ற அழகிய காட்சியும் நேர்த்தியாக செதுக்கப்பட்டிருந்தது.

இந்த தனித்துவமான அன்பளிப்பைப் பார்த்த முதலமைச்சர் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியும் சந்தோஷமும் அடைந்து, செவிலியர் அதிகாரிகளின் அன்பையும் நன்றியையும் மனமாரப் பாராட்டினார். இந்தஅன்பளிப்பை அழகாக வடிவமைத்து வழங்கிய ஐஸ்வர்யா ஃபர்னிச்சர்ஸ் நிறுவனத்திற்கும், இதனை ஒருங்கிணைத்த அனைத்து செவிலியர் அதிகாரிகளுக்கும் மனமார்ந்த நன்றிகள்.



# கவுண்டம்பாளையம் தொகுதியில் புதிய அரசு கலைக் கல்லூரி!

## சட்டப்பேரவையில் கனிமொழி சந்தோஷ் கோரிக்கை!!



பெ.நா.பாளையம்,ஆக 27

கோவை கவுண்டம்பாளையம் தொகுதி மாணவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், தொகுதியில் புதிய அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டும் என சட்டப்பேரவையில் கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் கனிமொழி சந்தோஷ் கோரிக்கை விடுத்தார்.

கவுண்டம்பாளையம் தொகுதியில் ஏராளமான மாணவர்கள் உயர்கல்வி பயிலும் ஆர்வத்துடன் உள்ள நிலையில், அவர்களுக்கு அருகாமையிலேயே உயர் கல்வி வாய்ப்புகள் கிடைப்பது மிகவும் அவசியம். அரசு கலைக் கல்லூரி அமைக்கப்படுவதன் மூலம், இப்பகுதி மாணவர்கள் நீண்ட தூரம் செல்ல வேண்டிய சிரமம் குறைவதுடன், உயர்கல்விக்கான அணுகலும் எளிதாகும்.

மேலும், இந்தக் கல்லூரி அமைக்கப்படுவதன் மூலம் படிப்பின் வாய்ப்புகளை மேம்படுத்தி, இப்பகுதி மாணவர்களின் எதிர்காலத்திற்கு புதிய திசையை உருவாக்க முடியும். பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்கள் உட்பட அனைத்து தரப்பு மாணவர்களும் உயர்கல்வியைத் தொடர இது பெரும் வாய்ப்பாக அமையும்.

"உயர்கல்விக்கான அணுகலை எளிதாக்கி, சமூக முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் வகையில், கவுண்டம்பாளையம் தொகுதியில் புதிய அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் வலியுறுத்தினார்.

கவுண்டம்பாளையம் தொகுதி மாணவர்களின் நீண்ட நாள் கோரிக்கையான அரசு கலைக் கல்லூரி அமைக்கும் நடவடிக்கையை அரசு விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் சட்டப்பேரவையில் கேட்டுக்கொண்டார்.



சத்தியமங்கலம் நகர்மன்றக் கூட்டம் நகராட்சி கூட்ட அரங்கில் நகர்மன்றத் தலைவர் ஜானகி ராமசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் நகராட்சி ஆணையர் எஸ்.வெங்கடேஸ்வரன், துணைத் தலைவர் நடராஜ் ஆகியோர் பங்கேற்றனர்.

### பாலம் கட்ட அனுமதி வழங்க

# ரூ.3 லட்சம் லஞ்சம் வாங்கிய நீர்வளத்துறையினர் கைது!

திருவாரூர், ஆக.27–

நாகை மாவட்டம் வேளாங்கண்ணியில் தங்கும் விடுதிக்கும், வாய்க்காலுக்கும் இடையே பாலம் கட்ட அனுமதி அளிக்க ரூ.3 லட்சம் லஞ்சம் வாங்கியதாக திருவாரூர் நீர் வளத்துறை உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் கைது செய்யப்பட்டனர்.

வேளாங்கண்ணியைச் சேர்ந்தவர் அபினேஷ் (26). இவர், வேளாங்கண்ணியில் தங்கும் விடுதி கட்டி வருகிறார். இவரது விடுதிக்கு எதிரே வாய்க்காலை கடக்க பாலம் கட்டிக் கொள்ள அனுமதி கோரி திருவாரூரில் உள்ள நீர்வளத்துறை வெண்ணாறு வடிநில கோட்டச் செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்தார்.

இதற்கு வடிநில கோட்ட உதவி செயற்பொறியாளர் மாணிக்கவேல், உதவிப் பொறியாளர் வினோத் ஆகியோர் ரூ. 3 லட்சம் லஞ்சம் கேட்டதாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து அபினேஷ், திருவாரூர் மாவட்ட லஞ்ச ஒழிப்புப்பிரிவு போலீசில் புகார் அளித்தார்.

இதைத்தொடர்ந்து, போலீசாரின் வழிகாட்டலின்படி, நேற்று இருவரிடமும் ரசாயனம் தடவிய ரூ. 3 லட்சம் பணத்தை அபினேஷ் அளித்தார். அப்போது டி.எஸ்.பி. நந்தகோபால் தலைமையிலான லஞ்ச ஒழிப்புப்பிரிவு போலீசார் 2 பேரையும் கையும், களவுமாக கைது செய்தனர். தொடர்ந்து அவர்களிடம் விசாரணை நடக்கிறது.

### தமிழகத்தில்

# பாதுகாப்பற்ற ஹிட்லர் ஆட்சி நடக்கிறது!

## டி.டி.வி. தினகரன் பேட்டி!!

தஞ்சை, ஆக. 27–

தஞ்சையில் அமமுக பொதுச் செயலாளர் டிடிவி. தினகரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:– பரந்தூர் விமான நிலைய திட்டத்தை தமிழக அரசு கைவிட்டதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் விமான நிலைய த்தை விரிவாக்கம் செய்ய மாற்றுத் திட்டத்தை கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தன்னை வளர்த்து ஆளாக்கிய இயக்கமான அதிமுக அழிந்து போகும் என அமைச்சர் செங்கோட்டையன் கூறியிருப்பது, அந்த இயக்கத்தின் மீது வன்மம் கொண்ட மனிதராக உள்ளார். அதிமுக, அமமுகவில் இருந்தவர்களை எல்லாம் அழைத்துக் கொண்டு சென்று நடுரோட்டில் நிறுத்தியுள்ளார். தவெகவில் செங்கோட்டையனின் நிலை என்னவென்று எனக்குத் தெரியும். அதிமுக அழிந்து போகாது, செங்கோட்டையன் தான் வீழ்ந்து போவார்.

தமிழக முதல்வர் விஜய் சட்டப்பேரவையில் பேசும் போது, மூன்று பைல்களை நான் ஓபன் செய்ய வேண்டியிருக்கும் என மிரட்டும் தொணியில் பேசுவது கண்டிக்க தக்கது. யார் குற்றம் செய்திருந்தாலும் தவறு தான். எனவே அந்த பைல்களை பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த மிரட்டல்களுக்கு எல்லாம் திராவிட கட்சிகள் பயந்து விடாது. முதல்வர் விஜய் சினிமாவில் ஹீரோவாக பார்க்கப்பட்டார். அரசியலில் வில்லனாக இருக்கிறார். முதல்வர் தூய சக்தி என்று சினிமா டைலாக் பேசி அரசியலுக்கு வந்தார். அவர் என்ன சுதந்திர போராட்ட தியாகியா. சிறந்த அரசியல் வில்லன் நடிகர் விஜய், அவருக்கு பாரத ரத்னா விருது கொடுக்கலாம்.

தவெகவுக்கு வாக்களித்த தமிழக மக்கள் உணர துவங்கி விட்டனர். 6 சிலிண்டர் தருவதாக அறிவித்து விட்டு, 3 சிலிண்டர் தருவதாக அறிவித்துள்ளனர். அதில் எதற்கு வருமான வரம்பு வைக்க வேண்டும். தமிழகத்தில் படித்து விட்டு இளைஞர்கள் வேலை இல்லாமல் பலர் உள்ளனர். ஆனால் நடத்துநர், ஓட்டுநர் பதவிக்கு வெளி மாநில சேர்ந்தவர்களை நியமிக்கிறார்கள். தங்கமோதிரம் திட்டத்துக்கு கேரள மாநிலத்தைச் சேர்ந்த நகைக் கடைக்கு டெண்டர் கொடுக்கப்பட்டுள்ளது. பெயர் தான் தமிழக வெற்றி கழகம், செய்வது எல்லாம் வேறு வேலை தான் இருக்கிறது.

திராவிட ஆட்சியில் ஊழல் குற்றச்சாட்டு இருக்கலாம், ஆனால் வளர்ந்த மாநிலத்தில் தமிழகம் முதல் இடத்தில் இருந்தது. ஆனால், தற்போது எல்லா துறைகளிலும் பின்னடைவை நோக்கி செல்லும் அச்சம் ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் இருந்து பிரதமராக ஒருவர் வர, எனக்கு கண்ணுக்கு எட்டிய வரையாரும் தெரியவில்லை. விஜய் தமிழ் படத்தில் தான் ஹீரோவாக நடித்தார். இங்கே தான் அந்த இன்ஸ்டா ஓடும். வடமாநிலத்தில் எல்லாம் அந்த இன்ஸ்டா ஓடாது. பிரதமர் மோடி 12 ஆண்டுகள் குஜராத்தில் சிறப்பாக செயல்பட்டதால், பிரதமராக கட்சியில் வாய்ப்பு கொடுத்தனர். சிறந்த செயல்பாடு மூலம் பிரதமராகினார். ஆசைப்படுவது தவறு இல்லை. அதற்கான நேரம் வரட்டும். முதலில் முதல்வர் விஜய் சொன்னதை செய்யப்படும். அவர் தமிழக மக்களை ஏமாற்ற பார்க்கிறார். இவ்வாறு அவர் கூறினார்.

# ஈரோட்டில் இலவச கண் பரிசோதனை முகாம்!

## சண்முகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்

ஈரோடு ஆக 27

ஈரோடு தெற்கு அரிமா சங்கம், ஏசியன் ஆப்டிகல்ஸ், அச்சுதா கண் மருத்துவமனை மற்றும் ரெட் டாக்ஸி இணைந்து நடத்திய இலவச கண் பரிசோதனை மற்றும் நீரிழிவு பரிசோதனை முகாம் லக்காபுரம் அரசு மேல் நிலைப் பள்ளியில் நடைபெற்றது அரிமா புஷ்பமாலா முகாமுக்கு தலைமை தாங்கினார். செயலாளர் பொன்மலர் வரவேற்றார். நிகழ்ச்சியில் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி.சண்முகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு முகாமை துவங்கி வைத்து பேசினார் நிகழ்ச்சியில் திட்ட இயக்குனர்கள் எஸ் ராஜரத்தினம், மஞ்சூர், பொருளாளர் ஸ்ரீதேவி, முன்னாள் மாவட்ட ஆளுநர் டி ஏ பூபதி, லக்காபுரம் முன்னாள் ஊராட்சி தலைவர் சாலை மாணிக்கம், காங்கிரஸ் முன்னாள் தலைவர் எல் சி பாலு, தவெக உறுப்பினர்கள் லோகு, பிரகாஷ், நீலா, பாண்டியன் உட்பட பலர் கலந்து கொண்டனர் முகாமில் பொது மக்களுக்கு கண் பரிசோதனை மற்றும் நீரிழிவுபரிசோ தனைகள் நடத்தப்பட்டு ஆலோ சனைகள் வழங்கப்பட்டது.

# தேர்தல் வழக்குகள் முடியும் வரை இடைத்தேர்தல் அறிவிக்கும் திட்டம் எதுவும் கிடையாது - தேர்தல் ஆணையம் பதில் மனு!

சென்னை, ஆக. 27–

தேர்தல் வழக்குகள் முடியும் வரை திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, பெருந்துறை, அம்பாசமுத்திரம் ஆகிய 5 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் அறிவிக்கும் திட்டம் இல்லை என இந் திய தேர்தல் ஆணையம், சென்னை உயர்நீதிமன்றத்தில் பதில் மனு தாக்கல் செய்தது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் பாளையங்கோட்டையைச் சேர்ந்த வழக்குரைஞர் வெங்கடாஜலபதி என்பவர் தாக்கல் செய்த பொதுநல வழக்கில், நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலில் இரு தொகு திகளில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முதல்வர் ச.ஜோசப் விஜய், திருச்சி கிழக்கு தொகுதி எம்எல்ஏ பதவியை ராஜிநாமா செய்தார்.

அதேபோல், அதிமுக எம்எல்ஏக்கள் மரகதம் குமரவேல் (மதுராந்தகம் தனி), சத்தியபாமா (தாராபுரம்தனி), ஜெயக்குமார் (பெருந்துறை), இசக்கி சுப்பையா (அம்பாசமுத்திரம்), எம்.ஆர்.விஜயபாஸ்கர் (கரூர்), சி.விஜய பாஸ்கர் (விராலிமலை) ஆகியோர் தங்களது எம்எல்ஏ பதவிகளை ராஜிநாமா செய் தனர்.

இந்நிலையில், திருச்சி கிழக்கு தொகுதியில் முதல்வர் விஜய் வெற்றியை எதிர்த்து, அங்கு திமுக சார் பில் போட்டியிட்ட இனிகோ இருதயராஜ் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.



இதேபோல், எம்.ஆர்.விஜய பாஸ்கர், சி.விஜய பாஸ்கர், இசக்கி சுப்பையா, ஜெயக்குமார் ஆகியோர் தங்களது பதவியை ராஜிநாமா செய்தாலும், அவர்களது வெற்றிக்கு எதிராக தேர்தலில் தோல்வி யடைந்த வேட்பாளர்கள் தனித்தனியாக தேர்தல் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

எனவே, தேர்தல் வழக்கு நிலுவையில் உள்ளதால், திருச்சி கிழக்கு உள்ளிட்ட 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிப்பு வெளியிடதடை விதிக்க வேண்டும் எனத் தெரிவித்தி ருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர்நீதி மன்றம் 5 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் அறிவிக்க இடைக்காலத் தடை விதித்து உத்தர விட்டிருந்தது.

இந்த தடையை நீக்கக் கோரி கரூர் முன்னாள் எம்எல்ஏ எம்.ஆர்.விஜயபாஸ்கர் தரப்பிலும் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு தலை மை நீதிபதி எஸ்.ஏ. தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, தேர்தல் ஆணையம் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில், உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி, தேர்தல் வழக்குகள் முடியும் வரை திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, பெருந்துறை, அம்பாசமுத்திரம் ஆகிய 5 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் அறிவிக்கும் திட்டம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

முதல்வர் விஜய் தரப் பில், தேர்தல் ஆணையத்தின் இந்த பதில் மனு தவறானது என எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. தமிழக அரசுத் தரப்பில், 5 தொகுதிகளில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த வழக்கை விரைந்து விசாரிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், திருச்சி கிழக்கு திமுக வேட்பாளர் இனிகோ இருதயராஜ் உள்ளிட்டோர் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு, விசாரணை யை செப். 8ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர். 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்ட விதிக்கப்பட்ட இடைக்காலத்தடையை நீட்டித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.



விருதுநகர்சொக்கநாதசாமிதிருக்கோவிலில்ஆவணிபிரம்மோற்சவவிழாவினையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் தேரோட்டம் நடைபெற்றது. பிரியாவிடை அம்மனுடன் சொக்கநாதர் நகர் உலா வந்து அருள்பாலித்தார்.



தமிழக அரசு அறிவித்துள்ள பால் கொள்முதல் விலை உயர்வு போதாது என்றும், கூடுதல் விலை உயர்வை அறிவிக்கக் கோரியும், கால்நடை விவசாயிகள் ஆவினுக்கு பால் வழங்க மறுத்து, தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் சாலையில் பாலை கொட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். சேலம் மாவட்டம் செல்லியம்பாளையத்தில் சாலையில் பாலை கொட்டி போராட்டத்தில் ஈடுபட்ட கால்நடை விவசாயிகள்.



தென்காசி மாவட்டம், குற்றாலம் மெயின் அருவியில் குளித்து மகிழும் சுற்றுலா பயணிகளை படத்தில் காணலாம்.



திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும்நாள்கூட்டத்தில்கலெக்டர்ஆனந்த்மோகன், மூளைமுடக்குவாதநோயினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் வித்யா உள்பட பலர் உள்ளனர்.



பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார் கோவை வெள்ளலூர் குப்பைக்கிடங்கு வளாகத்தில் திடீர் தீ விபத்து ஏற்பட்டதை தொடர்ந்து தீயணைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநகராட்சி ஆணையாளர் கட்டா ரவி தேஜா மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், களப்பணியாளர்கள் உள்பட பலர் உள்ளனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ஏஐ தொழில் நுட்பம் மூலம் மனுக்களை ஸ்கேன் செய்து, உடனுக்குடன் கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை கலெக்டர் தினேஷ்குமார் பார்வையிட்டார்.




வால்மார்ட் விருத்தி, ஐடியாஸ் டு இம்பேக்ட் பவுண்டேஷனுடன் இணைந்து, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு பணியகத்துடன் (கைடன்ஸ்) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

# தமிழக சிறு,குறு மற்றும் நடுத்த நிறுவனங்களின் உள்நாட்டு, உலகளாவிய சந்தை!

## வாய்ப்புகளை விரிவுபடுத்த வால்மார்ட் விருத்தி கைடன்ஸ் புரிந்துணர்வு ஒப்பந்தம்!!

**கோவை, ஆக. 27**

வால்மார்ட் விருத்தி, ஐடியாஸ் டு இம்பேக்ட் பவுண்டேஷனுடன் இணைந்து, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு பணியகத்துடன் (கைடன்ஸ்) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. திறன் மேம்பாடு, டிஜிட்டல் மாற்றம் மற்றும் உள்நாட்டு, சர்வதேச சந்தைகளுக்கான அணுகல் ஆகியவற்றின் மூலம் மாநிலத்தின் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் சுற்றுச்சூழல் அமைப்பை இந்தக் கூட்டாண்மை வலுப்படுத்தும்.

சென்னையில் நடைபெற்ற 'வெற்றி தமிழ்நாடு முதலீட்டு மாநாட்டில்' முறைப்படுத்தப்பட்ட இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், 2028ஆம் ஆண்டிற்குள் இந்தியா முழுவதும் உள்ள 1 லட்சத்து 70 ஆயிரத்துக்கும் அதிகமான சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு அதிகாரம் அளிக்கும் வால்மார்ட் விருத்தியின் இலக்கை நோக்கிய மற்றொரு பயணம் இதுவாகும். இந்தக் கூட்டாண்மையின் மூலம், தமிழ்நாட்டைச்சேர்ந்தஇந்தநிறுவனங்கள் வால்மார்ட் விருத்தியின் இலவசப் பயிற்சி, தனிப்பயனாக்கப்பட்ட வழிகாட்டுதல், சந்தை வாய்ப்புகள் மற்றும் வணிகக் கருவிகளைப் பெற்று, வலுவான மற்றும் டிஜிட்டல் திறன் கொண்ட வணிகங்களை உருவாக்க முடியும். மேலும், பிளிப்கார்ட் மற்றும் வால்மார்ட்மார்க்கெட்பிளேஸ் மூலம் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் திறன்களை வளர்த்து, தேசிய மற்றும் சர்வதேச விநியோகச் சங்கிலிகளுக்கான வழிகளையும் இந்த ஒப்பந்தம் உருவாக்கும். வால்மார்ட்மார்க்கெட்பிளேஸின் எல்லை தாண்டிய வர்த்தகப் பிரிவின் இந்தியத் தலைவர் ஆஷின் மேத்யூகூறுகையில், "இந்தியாவைத் தாண்டியும் வாடிக்கையாளர்களைச் சென்றடையும் திறன் கொண்ட தொழில்முனைவோர் மற்றும் உற்பத்தியாளர்களின் வலுவான அடித்தளத்தை தமிழ்நாடு கொண்டுள்ளது.

வால்மார்ட் மார்க்கெட்பிளேஸ் மூலம், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தங்கள் ஏற்றுமதித் திறன்களை வலுப்படுத்தவும், எல்லை தாண்டிய வர்த்தகத்தை எளிதாக்கவும், சர்வதேச சந்தைகளில் உள்ள வாடிக்கை யாளர்களுடன் இணையவும் நாங்கள் உதவ விரும்புகிறோம்.

மேலும் பல உள்ளூர் வணிகங்கள் தங்கள் ஏற்றுமதி லட்சியங்களை நிலையான வளர்ச்சிக்கான வாய்ப்புகளாக மாற்ற எங்களால் உதவ முடியும்," என்று கூறினார்.

வால்மார்ட்டின் பொது வணிகம் மற்றும் பேஷன் சோர்சிங் பிரிவின் மூத்த துணைத் தலைவர் அவனீஷ் குப்தா கூறுகையில், "அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியை முன்னெடுப்பதற்கு, இந்நிறுவனங்களுக்கு அதிகாரமளிப்பது மிகவும் அவசியம் என்று வால்மார்ட்டில் நாங்கள் நம்புகிறோம். கைடன்ஸ் அமைப்புடன் இணைந்து, வால்மார்ட் விருத்தி மூலமாக, தமிழ்நாடு முழுவதும் உள்ள தொழில்முனைவோருக்குத் தேவையான திறன்கள், டிஜிட்டல் ஆற்றல்கள், வழிகாட்டுதல் மற்றும் சந்தை அணுகலை வழங்கி, எதிர்காலத்திற்குத் தயாரான வலுவான வணிகங்களை உருவாக்கவும்,

மாநிலத்தின் செழிப்பான உற்பத்தித் துறைக்குப் பங்களிக்கவும் நாங்கள் இலக்கு வைத்துள்ளோம்," என்று கூறினார்.

# SNAP 2026 MBA நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பங்கள் தொடக்கம்!

**சென்னை, ஆக 27**

MBA படிப்புகளில் சேரவிரும்பும் மாணவர்களுக்கு தேசிய அளவிலான நுழைவுத் தேர்வான SNAP 2026க்கு சிம்பையாசிஸ் இன்டர்நேஷனல் (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்) விண்ணப்பங்கள் பெறத் தொடங்கியது.




விண்ணப்பப் பதிவு மற்றும் கட்டணம் செலுத்தும் பணிகள் ஆகஸ்ட் 21 முதல் நவம்பர் 25 வரை நடைபெறும். கணினி அடிப்படையிலான இந்தத் தேர்வு டிசம்பர் 13, 19 மற்றும் 26 ஆகிய மூன்று நாட்களில் நடைபெறும். விண்ணப்பதாரர்கள் மூன்று முறை வரை தேர்வு எழுதலாம். இதில் பெற்ற அதிகபட்ச மதிப்பெண் சேர்க்கைக்கு பரிசீலிக்கப்படும்.

சிம்பையாசிஸ் இன்டர்நேஷனல் (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்) துணைவேந்தர் டாக்டர் ராமகிருஷ்ணன் ராமன், "SNAP தேர்வு, சிம்பையாசிஸ் நிறுவனத்தின் முதன்மையான MBA கல்வித் திட்டங்களுக்கான முக்கிய நுழைவாயிலாக உள்ளது. SNAP 2026 விண்ணப்பங்களைத் தொடங்குவதில் மகிழ்ச்சி அடைகிறோம். மாணவர்கள் முன்கூட்டியே தேர்வுக்குத் தயாராகி, எங்கள் உலகளவில் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கான அடுத்த கட்டத்தை எட்டுமாறு ஊக்குவிக்கிறோம்," என்றார்.


SNAP 2026 தேர்வு இந்தியாமுழுவதும் 79 நகரங்களில் நடத்தப்படும். ஒரு முயற்சிக்கான பதிவுக் கட்டணம் ரூ.2,550 ஆகும். தேர்வு முடிவுகள் ஜனவரி 12, 2027 அன்று அறிவிக்கப்படும். SNAP தேர்வு மூலம் SBM புனே, SCMHRD, SIIB, SIMS, SIBM பெங்களூரு, SIBM ஹைதராபாத் உள்ளிட்ட சிம்பையாசிஸ் நிறுவனங்களில் MBA படிப்புகளில் சேரலாம். AI, அனாலிடிக்ஸ், ஹெல்த்கேர் மேலாண்மை, வங்கி மற்றும் நிதி, டேட்டா சயின்ஸ், IT மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு சிறப்புப் படிப்புகளும் வழங்கப்படுகின்றன.



திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், சீவலப்பேரி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்டம் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனந்த் மோகன், பல்வேறு அரசு துறைகள் சார்பாக 76 பயனாளிகளுக்கு ரூ.11.31 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.



திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், சீவலப்பேரி கிராமத்தில், நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்டம் முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனந்த் மோகன், பல்வேறு துறைகளின் செயல்முறை பணிகள் மற்றும் விழிப்புணர்வு கண்காட்சியினை பார்வையிட்டா ர்கள்.



தருமபுரி மாவட்டம், பென்னாகரம் அரசு தலைமை மருத்துவமனையில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் வே.சரவணன் ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் உடனிருந்தனர்.



திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், சீவலப்பேரி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்டம் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனந்த் மோகன், பல்வேறு அரசு துறைகள் சார்பாக 76 பயனாளிகளுக்கு ரூ.11.31 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ச.வித்யா, வருவாய் கோட்டாட்சியர் பிரியா உட்பட பலர் உள்ளார்கள்.

### ஸ்கேலர் பயிற்சிக்குப் பிறகு

# ஃபிளிப்கார்ட்டில் பின்தளப் பொறியாளர் வேலைவாய்ப்பு!

### 100%+ ஊதிய உயர்வு !!



**சென்னை,ஆக 27**

திருப்பூரைச் சேர்ந்த 25 வயதான பி.எஸ்சி. கணினி அறிவியல் பட்டதாரியான தீபக் குமார், தனது தொழில் வாழ்க்கையை அசோசியேட் சிஸ்டம் இன்ஜினியராகத் தொடங்கினார். தகவல் தொழில்நுட்பச் சேவைத் துறையில் பணியாற்றிய அவர், பராமரிப்பு மற்றும் பயன்பாட்டுக்கு கொண்டுவரும் பணிகளிலிருந்து விலகி, தயாரிப்பு சார்ந்த மென்பொருள் பொறியியல்துறைக்குமாறவிரும்பினார். இதற்காகதரவுக்கட்டமைப்புகள்மற்றும் அல்காரிதம்கள் (DSA), குறைந்தநிலை வடிவமைப்பு (LowLevel Design), உயர்நிலை வடிவமைப்பு (HighLevel Design), அமைப்பு வடிவமைப்பு (System Design) ஆகியவற்றில் தனது திறன்களை மேம்படுத்த ஸ்கேலர் நிறுவனத்தில் ஜூன் 2024ல் சேர்ந்தார்.

முழுநேரப் பணியுடன் படிப்பைத் தொடர்ந்த தீபக், கடினமான வேலை நேரத்தையும் கற்றலையும் சமநிலைப்படுத்தி, தொடர்ந்து குறியீட்டுப் பயிற்சி மற்றும் போட்டிகளில் ஈடுபட்டார். பாடத்திட்டத்திற்கு அப்பால் செயற்கை நுண்ணறிவு, கிளவுட் மேம்பாடு மற்றும் திறந்த மூல மென்பொருள் துறைகளிலும் செயல்பட்ட அவர், அபாச்சி ஃபைனரேட் (Apache Fineract) மற்றும் அபாச்சி காஃப்கா (Apache Kafka) திட்டங்களுக்கு பங்களித்தார். மேலும், கூகுள் சம்மர் ஆஃப் கோடு (GSoC) திட்டத்திலும் பங்கேற்று, செயற்கை நுண்ணறிவு சார்ந்த பயன்பாடுகளை உருவாக்கினார்.

இந்தத் தொடர் முயற்சியின் பலனாக, தீபக் ஃபிளிப்கார்ட்டில் (Flipkart) பின்தள மென்பொருள் பொறியாளர் (Backend Engineer) பணியைப் பெற்றதுடன், தனது முந்தைய ஊதியத்தை விட 100%க்கும் அதிகமான உயர்வையும் பெற்றார்.

தற்போது மென்பொருள் மேம்பாட்டு பொறியாளர்2 (Software Development Engineer2) ஆக, இந்தியா முழுவதும் நடைபெறும் லட்சக்கணக்கான விநியோகங்களுக்குப் பின்னால் செயல்படும் அமைப்புகளை உருவாக்குவதிலும், ஃபிளிப்கார்ட்டின் கடைசி மைல் விநியோகத் தளத்தை வலுப்படுத்துவதிலும் பணியாற்றுகிறார். தனது வெற்றிக்கு முக்கியக் காரணம், கடினமான சூழலிலும் கற்றலைத் தொடர்ந்து மேற்கொண்ட நிலைத்தன்மையும் ஒழுக்கமான முயற்சியுமே என அவர் குறிப்பிடுகிறார்.

# மத்திய கிழக்கில் முழு சேவையை மீண்டும் தொடங்கிய ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ்!

**சென்னை, ஆகஸ்ட் 27**

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ், ஆகஸ்ட் 8 முதல் குவைத்துக்கு வாரத்திற்கு ஆறு விமான சேவைகள் மீண்டும் தொடங்கியுள்ளது. இதன் மூலம் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தனது முழுமையான விமான சேவை வலையமைப்பு மீட்டுள்ளது. ரியாத், தம்மாம், துபாய், தோஹா மற்றும் குவைத் ஆகிய நகரங்களிலிருந்து கொழும்பு வழியாக சென்னை, திருச்சிராப்பள்ளி, திருவனந்தபுரம், மதுரை மற்றும் கொச்சி உள்ளிட்ட தென்னிந்திய நகரங்களுக்கு எளிதான இணைப்பு சேவையை வழங்குகிறது. ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் வர்த்தக பிரிவு தலைவர் திமுத் தென்னகோன், மத்திய கிழக்கு சேவைகளை முழுமையாக மீண்டும் தொடங்குவதன் மூலம் பயணிகளுக்கு நம்பகமான சேவை மற்றும் இலங்கை விருந்தோம்பலை தொடர்ந்து வழங்க முடியும் என்று தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் இந்தியா, வங்கதேசம் மற்றும் நேபாளத்திற்கான பிராந்திய மேலாளர் ஃபவ்சான் ஃபரீத், மத்திய கிழக்கு சேவை வலையமைப்பு தென்னிந்திய பயணிகளுக்கு முக்கியமானதாக உள்ளதாகவும், தற்போது முழுமையான சேவையை மீண்டும் தொடங்கியுள்ள நிலையில் தடையற்ற விமான இணைப்பு மற்றும் நம்பகமான சேவையை தொடர்ந்து வழங்கும் என்றும் தெரிவித்தார். இந்தியா மற்றும் கொழும்பு இடையே வாரத்திற்கு 90 விமான சேவைகளை ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் வழங்குகிறது. சென்னை, மும்பை, டெல்லி, ஹைதராபாத், பெங்களூரு, கொச்சி, திருவனந்தபுரம், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்கள் இந்த வலையமைப்பில் இடம்பெற்றுள்ளன.

பயணிகளுக்கு சைவம், அசைவம் மற்றும் பிராந்திய உணவுகளுடன் விருது பெற்ற உணவு மெனு, தமிழ், மலையாளம், தெலுங்கு மற்றும் இந்தி திரைப்படங்கள் உள்ளிட்ட பொழுதுபோக்கு வசதிகள் வழங்கப்படுகின்றன. எகானமி வகுப்பு பயணிகளுக்கு 7 கிலோ குப்பை மற்றும் 30 கிலோ செக்இன் சாமான் அனுமதிக்கப்படுகிறது. ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் தனது சொந்த சேவைகள் மற்றும்கூட்டணிவிமானநிறுவனங்களுடன்இணைப்பு சேவைகள் மூலம் 63 நாடுகளில் 130 இடங்களுக்கு பயணிகளை இணைக்கிறது.

# சென்னையில் ஜெனரேட்டிவ் ஏ.ஐ. ஹேக்கத்தான்!

### 14 பெண்கள் தேசிய இறுதிப்போட்டிக்கு தகுதி!!

**சென்னைஆக 27**

சென்னையில் லாஜிடெக் எம்எக்ஸ் மற்றும் ஆஸ்பயர் ஃபார் ஹெர் இணைந்து #WomenWhoMaster முன்முயற்சியின் கீழ் தேசிய அளவிலான ஜெனரேட்டிவ் ஏஐ ஹேக்கத்தானின் சென்னை மண்டல சுற்றை எஸ்ஆர்எம் ஈஸ்வரி பொறியியல் கல்லூரியில் நடத்தியது. இதில் சென்னை மற்றும் தமிழ்நாடு முழுவதிலுமிருந்து 233 பெண்கள் பங்கேற்று, நிதி மேம்பாடு, செல்வ மேலாண்மை, பட்ஜெட் திட்டமிடல், முதலீடு மற்றும் நீண்டகால நிதிப் பாதுகாப்பு தொடர்பான ஏஐ தீர்வுகளை உருவாக்கினர். இந்த முயற்சி நாடு முழுவதும்



சுமார் ஒரு லட்சம் பெண்களை சென்றடைந்துள்ளது. சென்னை மண்டலத்தில் இருந்து 14 பெண்கள் தேசிய இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர். தேசிய இறுதிப்போட்டி செப்டம்பர் 10ஆம் தேதி சென்னையில் உள்ள லாஜிடெக் தலைமை அலுவலகத்தில் நடைபெறுகிறது. தொழில்நுட்பத் துறையில் பெண்களின் பங்களிப்பை அதிகரித்து, ஜெனரேட்டிவ் ஏஐ திறன்கள், வழிகாட்டுதல் மற்றும் தொழில் வாய்ப்புகள் மூலம் எதிர்கால பெண் தொழில்நுட்பத் தலைவர்களை உருவாக்குவதே இந்த முயற்சியின் முக்கிய நோக்கமாகும்.

# boltt Ace 5G மற்றும் Evo ஸ்மார்ட்போன்கள் அறிமுகம்!

**சென்னை, ஆக.27**

FireBoltt நிறுவனத்தின் இந்திய ஸ்மார்ட்போன் பிராண்டான boltt, தனது முதல் ஸ்மார்ட்போன்களான Ace 5G மற்றும் Evo மாடல்களை அறிமுகப்படுத்தியுள்ளது.




6.79 இன்ச் 120Hz டிஸ்ப்ளே, Google Gemini அடிப்படையிலான AI வசதிகள், Circle to Search, Google Lens,

AI Night Mode மற்றும் Android 16 உள்ளிட்ட அம்சங்களுடன் இந்த போன்கள் வந்துள்ளன. இரு மாடல்களிலும் 6000mAh பேட்டரி மற்றும் 8MP Real Tone AI செல்ஃபி கேமரா இடம்பெற்றுள்ளன. Ace 5G மாடலில் UNISOC T8200 ப்ராசசர், 64MP AI கேமரா மற்றும் 18W ஃபாஸ்ட் சார்ஜிங் வசதி வழங்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப விலை ரூ.13,999 ஆகும். Evo மாடலில் UNISOC T7250 ப்ராசசர் மற்றும் 50MP AI கேமரா இடம்பெற்றுள்ள நிலையில், இதன் ஆரம்ப விலை ரூ.10,999 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இரு ஸ்மார்ட்போன்களும் செப்டம்பர் 1ஆம் தேதி மதியம் 12 மணி முதல் Flipkartல் விற்பனைக்கு கிடைக்கும். முதல் நாள் சலுகையாக Ace 5G ரூ.12,999க்கும், Evo ரூ.9,999க்கும் கிடைக்கும்.

AI வசதிகள், நீண்ட நேர பேட்டரி பயன்பாடு மற்றும் நவீன வடிவமைப்புடன் இந்திய நுகர்வோருக்கு அணுகக்கூடிய ஸ்மார்ட்போன் அனுபவத்தை வழங்க boltt இலக்கு வைத்துள்ளது.

தின கனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

27.08.2026




Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.